
# "சித்திகளும் அத்தைகளும்"

**(மீள்பதிவு)**




இந்தமுறை திருநெல்வேலி போயிருந்தபோதும் செல்விச்சித்தி வீட்டிற்குப் போக முடியவில்லை. தோவாளையில் ஒரு நெருங்கிய உறவினரின் திருமணம். மனைவிக்கு லீவு கிடைக்காதலால் நான் மட்டும் தனியாகப் போவதென்று முடிவாகியது. ஊருக்கு வரப்போவதை தெரிந்து கொண்டு முன் கூட்டியே ஃபோன் செய்து விட்டாள் சித்தி.

“எல… தோவாள கல்யாணத்துக்கு வரப்போறியாமே….போற வளிதான.. சித்தியை வந்து ஒரு எட்டுப் பாத்துட்டுப் போடே’ என்றாள்.

‘இந்த முறை இரண்டு நாளிருப்பேன். கண்டிப்பாக வருகிறேன்’ என்றிருந்தேன்.

செல்விச் சித்தி அம்மாவிற்கு அடுத்த தங்கை,பாளையங்கோட்டையில் தனியாகத்தான் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறாள். கிட்டத்தட்ட நாற்பது வருடங்களாக …. இருபது வயதிலேயே கல்யாணம்..ஒரு வருடம் முடிவதற்குள்ளாகவே பிரிவ. தம்பி சேது ( மாமா ) இருந்தவரைக்கும் அவரின் ஆதரவில் இருந்த சித்திக்கு, சேது மாமாவின் மறைவிற்குப்பிறகு, தனிமையே துணை!

சித்தியிடம் வருகிறேன் என்று சொல்லி விட்டேனே தவிர இந்த முறையும் வழக்கம் போல tight schedule. வீட்டம்மா சென்ற முறை ஊருக்கு சென்று வந்த பிறகிலிருந்து இப்போது வரை எந்தெந்த உறவினர் வீடுகளில் என்னென்ன விசேடம் நடந்தது என்பதற்கான பட்டியல் தயாரித்து வைத்திருந்தாள்:

“குமரேசன் வீட்டுக்கு போகாம இருந்திராதிங்க. மக சடங்குக்கு நூறு மட்டம் ஃபோன் பண்ணிருப்பான்..பொறவு அவன் வீட்டுக்காரி முகத்தில முளிக்க முடியாது…..”

“சிவக்கொழுந்து சித்தப்பாவ ஒரு எட்டு பாத்துட்டு வந்திருங்க…ஆஞ்சியோ பண்ணதுக்கப்பறமா நாம போயி பாக்கலண்ணு ஆவலாதி வரும்”

சொந்த ஊருக்குப் போவது தொடர்பான மன எழுச்சியும் உற்சாகமும் நடுத்தரக் குடும்ப ஆண்மகன்களின் திருமணத்திற்கு முன்பாக ஒருவாறாகவும் பின் வேறு மாதிரியும் இருக்கிறது. கல்யாணத்துக்குப்பிறகு “தனியாக “. ஊருக்குப் போகும் சந்தர்ப்பம் அரிதாகவே வாய்க்கிறது. அதுவும் வடம் கட்டி அனுப்பியது போல கயிற்றின் மறுமுனை, தொலைபேசியாக வீட்டம்மாளிடம்:

“இப்ப எங்க இருக்கீங்க?..”

“ராஜியத்த வீட்டில..”

“நாலு மணிக்கு அருணா வீட்டுக்கு வருவீங்கண்ணு சொல்லிருக்கேன்…அவ எங்கயோ வெளிய போக வேண்டிய programme அ கேன்சல் பண்ணிட்டு wait பண்ணிட்டிருக்கா..சீக்கிரம் கிளம்புங்க….”

அருணா வீடு பெருமாள்புரத்தில். அங்கு போய்விட்டு, பாளையிலிருக்கும் சித்தியின் வீட்டிற்குச் சென்றால் நெல்லை எக்ஸ்பிரஸை மிஸ் பண்ண வேண்டியிருக்கும்!

சித்தியிடம் ஃபோன் பண்ணி சொல்லி விட்டேன்.

“தப்பா எடுத்துக்காத..அடுத்த முறை கண்டிப்பா வருவேன்”

"பரவாயில்லல.. உனக்கு ஆயிரம் சோலி இருக்கும்..நெல்லை எக்ஸ்பிரஸ்லலதான போற?” என்றாள் ஏமாற்றத்தைக் காட்டாத குரலில்.

அருணா வீட்டிலிருந்து கிளம்பி ஜங்ஷன் வந்து, அரக்கப்பரக்க சாந்தியில் அல்வா வாங்கிக் கொண்டு ஸ்டேஷனை அடைந்தபோது நான் ஏற வேண்டிய பெட்டி அருகே சித்தி நின்று கொண்டிருந்தாள்.

“அய்யோ, சித்தி.. உன்ன யாரு இந்த வயசான காலத்தில அலைய சொன்னா...நான்தான் அடுத்த தடவ கண்டிப்பா வருவேன்னு சொன்னன்ல"

“பாத்து ரொம்ப நாளாச்சிடா… திரும்ப எப்ப வருவியோ..பொளச்சிக்கிடப்பனாண்ணு தெரியாது….”

கையில் கொண்டு வந்திருந்த பார்சலைக் கொடுத்தாள்.

“இட்லிதாம்ல…உனக்குப் பிடிக்கும்னு எள்ளு மிளகாப்பொடி..பயணத்துகையலும் நல்லெண்ணை ஊத்தி வச்சிருக்கேன். டிரயின்ல கொண்டு வர்ற சாப்பாடு உனக்கு ஒத்துக்காது…”

டிரயின் கிளம்பி கண்ணிலிருந்து மறையும் வரைகையசைத்துக்கொண்டிருந்தாள்.

காலையில் சென்னையடைந்ததும் ஃபோனில் அழைத்து வந்து சேர்ந்து விட்ட விஷயத்தைச் சொன்னதோடு, இட்லியும் பொடியும் பிரமாதம் எனக்கூறவும் மறக்கவில்லை. அந்தச் சாதரண வார்த்தைகள் அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சியளிக்கும் என்பதையறிவேன்.

தாம் உதாசினப்படுத்தப் படுகிறோமோ என்கிற சந்தேகமோ தன்னகங்காரமோ இல்லாது காலாவதியாகிக் கொண்டிருக்கும் பாசத்தை உயிர்ப்போடு வைத்திருக்கும் ஒரு சித்தியோ அல்லது அத்தையோ எல்லாக் குடும்பங்களிலும் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

**--NATs**